[1984 மார்ச் 30

சிறுமுகையிலுள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர்

519 —(*வினா எண். 21265) திரு. கு. ரமணி : மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையத்தை அடுத்துள்ள சிறுமுகையில் உள்ள விஸ்கோஸ் தொழிற்சாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் பவானியாற்றில் நீரைக் கெடுத்து வருவதால் கால்நடைகள் சாவதும், விவசாயம் பாதிப்பதும் அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இது குறித்து தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விஸ்கோஸ் கம்பெனி பல ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. அதிலே ரொம்ப மோசமாக விஷத்தன்மை கொண்ட இரசாயன கழிவுப் பொருள்கள் உபயோகப்படுத்தப்பட்டு அதிலேயிருந்து வெளியேறுகிற தண்ணீர் முழுவதும் பவானி ஆற்றிலே கலக்கிறது. அந்தத் தண்ணீரை மாடுகள் குடிக்கிறபோது அவை சாவதும் மனிதர்கள் உபயோகப்படுத்துகிறபோது அவர்களுக்குப் பல்வேறு வியாதிகள் வருகிற நிலைமையும் இருக்கிறது. இது குறித்து அரசாங்கத்திற்குப் பல ரிப்போர்ட்டுகள் விவசாய சங்கங்களின் சார்பிலும், தனி நபர்களின் சார்பிலும், தொழி சங்கங்களின் சார்பிலும் அனுப்பப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட மனுக்களின்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வாரியத்திற்கு அப்படிப்பட்ட புகார் எதுவும் வரவில்லை என்றுதான் குறிப்பிலே இருக்கிறது. அந்தக் கழிவு நீர் சம்பந்தமாக வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கைகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்காமல் இருக்கிறார்கள். அந்தக் கம்பெனியிலேயிருந்து வெளியேறுகிற கழிவு நீரிலேயிருந்து விஷத்தன்மை கொண்ட பொருள்களை அப்புறப்படுத்துவதற்காக பல லட்சக் கணக்கான ரூபாய் செலவழித்து வெளிநாடுகளின் உதவியோடு இயந்திரங்களை வரவழைத்திருந்தும் கூட அந்தத் தொழிற்சாலையில் அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தாத நிலை இருக்கிறது. அப்படியென்றால் அந்தத் தொழிற்சாலை தொடர்ந்து அந்த

1984 மார்ச் 30]

தவறை செய்து கொண்டிருக்கிறது என்றுதான் அர்த்தம். அதை அரசாங்கம் பரிசீலனை செய்ததா? வாரியம் கவனிக்கிறது என்றால், இதன் மீது என்ன நடவடிக்கையை எடுத்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் திட்டவட்'-மாக அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு 57 மி.லி. தண்ணீரைத் தொழிற்சாலை உபயோகத்திற்காக பயன்படுத்துகிறது. நாளொன்றுக்கு 55 மி.லி திரவக் கழிவு நீரை இத்தொழிற்சாலை பவானி ஆற்றில் வெளியேற்றுகிறது. இத்தொழிற்சாலை தனது கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்காக சுமார் ரூபாய் இரண்டு கோடிக்கு ஒரு கழிவு நீர் சுத்திகரிக்கும் நிலையத்தை அமைத்துள்ளது. இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரின் தன்மைகளாவன: பி.எச். 3.5; டி.டி.எல். 1,230 மி.லி./லிட்டர்; சிங்க் 5.5. மி.லி./லிட்டர்; பி.ஓ.டி. 380 மி.லி./லிட்டர்; சி.ஓ.டி. 964 மி.லி./லிட்டர்.

இத்தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரானது தானே இயங்கும் கண்தடுப்பு வழியாகச் செல்கிறது; இந்தக் கண் தடுப்பானால் கழிவு நீரில் உள்ள மிதக்கும் பொருள்கள் தடுத்து நிறுத்தப்படுகின்றன. பின்னர் இக்கழிவு நீரானது இரண்டு நடு நிலைப்படுத்தும் தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. இத்தொட்டிகளில் கழிவு நீரானது மாறி மாறி சேகரிக்கப்பட்டு சுண்ணாம்புக் கலவையின் மூலம் நடுநிலைப்படுத்தப்படுகிறது. இத்தொட்டிகளின் அடிப்பகுதியிலிருந்து கழிவு நீரில் காற்று செலுத்தப்படுகிறது. இவ்வாறு சுத்தப்படுத்தப்பட்ட கழிவு நீர் இரண்டு வடிய வைக்கும் தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. அந்தத் தொட்டிகளில் படிகாரத்தின் மூலம், கழிவு நீரானது தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்வாறு தெளிய வைக்கப்பட்ட கழிவு நீரானது ஒவ்வொன்றும் 50 குதிரைத் திறனுள்ள 30 காற்றூட்டிகள் பொறுத்தப்பட்ட மூன்று தொட்டிகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்தக் காற்றூட்டி தொட்டிகளில் சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீரானது பின்னர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

(முற்பகல் 10-00).

இவ்வாறு சுத்திகரிக்கப்பட்டு வெளியேற்றப்படும் கழிவு நீரின் தன்மைகள் வாரியத்தினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள வரையறைக்குள் இல்லாமல் இருக்கின்றன என பரிசோதனை முடிவுகளிலிருந்து தெரிய வருகிறது. சுத்திகரிப்பு முறையிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து, கழிவு நீரின் தன்மையை, உரிய வரைமுறைக்குள் கொண்டு வரவேண்டும் என தொழிற்சாலை அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது குறித்து தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொடர் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]